# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,004 — 1919 ம் ஆண்டு சித்திரைமீ 4 ந் திகதி வெள்ளிக்கிழமை.

## Part IV. — நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

1916 ம் வருஷத்தின் 15 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தால் புதுப்பித்த 1896 ம் வருஷத்தின் 20 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 30 (19 B) ம் பிரிவுக்கு இணங்க நுவரஎலியா சீர்திருத்தற் சபையாரால் உண்டாக்கப்பட்டு அதிகார மந்திரசபையாரின் ஆலோசனையோடு உத்தமனுர் தேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட துணைப்பிரமாணம்:—

பட்டணத்தின் சுகத்திற்காக எந்த வளவிலேயாவது இடத்திலேயாவது செடிகள் பத்தைகள் இருக்கப்படாதென்று சீர்திருத்தல் சபையார் அனுமானித்தால் அந்த வளவின் அல்லது இடத்தின் சொந்தக்காரனுக்கு அல்லது குடியிருப்பவனுக்கு அல்லது அக்காரியபாகம் பார்ப்பவனுக்கு மேற்சொல்லிய செடிகள் பத்தைகளை சீர்திருத்தல் சபையார் குறிப்பிடும் நாட்களுக்கு இடையில் மேற்சொல்லிய சபையாருடைய விருப்பப்பிரகாரம் அகற்றிச் சுத்தம்பண்ணுமாறு ஒரு நொத்தீசு எழுதி அறிவித்தல் மேற்படி சபையாருக்கு ஞாயமாயிருக்கும். அப்படி அறிவித்தல் கிடைத்தவுடன் அந்த வளவின் அல்லது இடத்தின் சொந்தக்காரன் அல்லது குடியிருப்பவன் அல்லது காரியபாகம் பார்ப்பவன் நொத்தீசில் சொல்லிய பிரகாரம் செடிகளை பத்தைகளை வெட்டிச் சுத்தம்செய்வது அவனுடைய கடமை.

உத்தமனுர் கட்டளைப்படி,

கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1919 ம் ஆண்டு மார்ச்மீ 27 ந் உ.

ஆர். ஈ. ஸ்ற்றப்ஸ்,
கலோனியல் சக்கிறுத்தார்.

---

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் முனகமவிலிருக்கும் கூலிச்சனங்களுக்காகக் கட்டியிருக்கும் யால்களுக்குப் போகும் றோட்டு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 16,910. குறிச்சி—முனகம.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | கட்டுகல்கேனவத்த .. | 4 தென்னைமரமும் 3 பிலாமரமுமுள்ள தோட்டம் | முனகம, டபிள்யு. டொன் சைமன் குணரட்ண | 0 0 24·6 |

எடுத்துக் கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1919 ம் ஆண்டு சித்திரை மாசம் 29 ந் தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு கொறன வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1919 ம் ஆண்டு பங்குனிமீ 28 ந் உ.

சீ. வீ. பிறெயின்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஷு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கொட்டுவேகொடயில் பொதுக கக்கூஸ் கட்டுகிறதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 11,120. குறிச்சி—கொட்டுவேகொட.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | உணகஹகொறட்டுவ .. | தோட்டம் .. | ஏ. டப்ளிவ். டப்ளிவ். கே. பயிஸ்அப்பு .. | 0 0 6·3 |

எடுத்துக்கோள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஷு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சிஉப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின் படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1919 ம் ஷு மெய்மாசம் 24 ந் தேதியிலன்று காலமே 10 மணிக்கு மாத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம்சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்துறை கச்சேரி,
1919 ம் ஷு மார்ச்சிமீ 24 ந் வ.

டீ. ரீட்,
அரசாட்சி உப ஏசண்டு.

---

1876 ம் ஷு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் முத்தெட்டுகல ரோட்டிலிருந்து சியம்பலன் கமுவ ரோட்டுக்கு இறவல் குவாறி என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதம படத்து இல. 1,313. குறிச்சி—கட்டுக்கெந்தை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| o 985ப1 | கட்டுகெந்தேகேன்யாய .. | சேனை .. | ஜே. எல். பெறேரு .. | .. 2 0 8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஷு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஉப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின் படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1919 ம் ஷு வைகாசிமாதம் 15 ந் தேதியிலன்று பிற்பகல் 1 மணிக்கு குருநாக்கல் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருணுக்கல் கச்சேரி,
1919 ம் ஷு பங்குனிமீ 22 ந் வ.

சீ. ஆர். கம்பர்லாண்ட்,
வடமேன் மாகாணம் அரசாட்சி ஏசண்டு.

---

## உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இல. 7,175, மாத்தளை.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1919 ம் ஷு (ஏப்பிரல்) சித்திரைமீ 4 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

குறிப்பு.—இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழி யுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

மத்திய மாகாணம் மாத்தளை டிஸ்திறிக் தெற்கு மாத்தளையைச்சேர்ந்த கம்பாக்கியபத்தில் நாறன்கொமுவ என்னுங் கிராமத்திலுள்ள இத்துட னணைக்கப்படும் படப்பிரதிகளில்* விவரித்தபடியே கீழ்க் குறிகுங் காணித் துண்டுகள் :—

I.—பிரதம படம் 24.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 146 .. | ரோட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம் .. .. .. | 0 0 3 |
| 149 .. | ஷை .. .. .. .. | 0 0 7 |
| | | 0 0 10 |

எல்லைகளாவன: வடக்கு-முடிக்குரிய உல்பொத்த முகலான; கிழக்கு-முடியால் விற்கப்பட்ட மாசகொல்லயாய, (320,982 ம் உ. ப. ல் காணும் காணி), 136,883 ம் உ. ப. ல் காணும் காணி, மாசகொல்லயாய எல; தெற்கு-136,882 ம் உ. ப. ல் காணும் காணி; மேற்கு-மாத்தளையிலிருந்து வரும் பெரிய ரோட்டு.

II.—பிரதம படம் 24.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 164 .. | ரோட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம் .. .. .. | 0 1 35 |

எல்லைகளாவன: வடக்கு-கன்சபாவ ரோட்டு; கிழக்கு-கெப்பிற்றிபொல றட்டேமகாத்மயா உரித்தாடும் மடமேவத்த; தெற்கு-முடியால் விற்கப்பட்ட ஜேர்மன் தோட்டம் (322,286 ம் உ. ப. ல் காணும் காணி); மேற்கு-முடியால் விற்கப்பட்ட ஜேர்மன் தோட்டம் (322,286 ம் உ. ப. ல் காணும் காணி), முடியால் விற்கப்பட்ட பிகாமுல்லயாயவத்த, (321,937 ம் உ. ப. ல் காணும் காணி).

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 474 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[மாத்தளை வி. உ. 2—1919.]

[அறிவித்தல் இல. 7,176, குருநாக்கல்.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1919 ம் ஞூ (எப்பிரல்) சித்திரைமீ 4 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச் சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர், ஜே. எம். டேவிஸ் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டேனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

குறிப்பு :—இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் கத்துகாம்பொல காறபத்தைச்சேர்ந்த கத்துகாம்பொல கோறளேயிலுள்ள கணுபிச்சியக் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் படப்பிரதிகளில்* விவரித்தபடியே கீழ்க்குறிக்கப்படுங் காணித்துண்டுகள் :—

I.—பிரதமபடம் 3,794.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| B 1302½ | ரேூட்டு | 1 3 8 |
| K 1302½ | ரேூட்டு | 0 0 19 |
| | | 1 3 27 |

எல்லைகளாவன : வடக்கு-மாறவில்லவிலிருக்கும் டபிள்யு. டபிள்யு. கைத்தான் பெணுன்டோ வுரித்தாடும் தல்ககாமுல்லவத்த, கமிஞ எதானு வுரித்தாடும் கடுறுககாவத்த, நத்துயக்க முடியான்சிலாகே அனகே ஏதான வுரித்தாடும் அம்பககாமுலவத்த, சிறிபிருமன வப்புகாமி யுரித்தாடும் வெலக்கும்புரு, கோயில் சொத்தாகும் பான்சாலேவத்தை, டெயுனுகல்பெடிகே டோத்துவா வுரித்தாடும் கொங்ககாமுலப்பில்லவா ; கிழக்கு-டெயுனுகல்பெடிகே டொத்துவா வுரித்தாடும் கொங்ககாமுலப்பில்லவா, முடிக்குரிய ரேூட்டு, முடிக்குரிய கொடெல்லவத்த, வற்ணக்குல வீரசூரிய கைத்தான் பெணுன்டோ வுரித்தாடும் கொடெல்லவத்த, மேற்படியாரா ஆரித்தாடும் ஒரு ரேூட்டு, மேற்படியாரா ஆரித்தாடப்படும் கொடெல்லவத்த, மேற்படியாரா ஆரித்தாடப்படும் கொடெல்லவத்தப்பில்லவா, மேற்படியாரா ஆரித்தாடப்படும் கொடெல்லவத்தக்கும்புரு, மேற்படியாரா ஆரித்தாடப்படும் கொடெல்லவத்த, முடிக்குரிய கொடெல்லகேன, முடிக்குரிய ஒரு ரேூட்டு ; தெற்கு-வத்துககாமுல்லக் கிராம வெல்லே ; மேற்கு-அடிகாற முடியான்சிலாகே சுந்தரகாமி யுரித்தாடும் பனுககயாயவத்த, டெகுனுகல்பெடிகே டொகிவா வுரித்தாடும் பனுககயாயவத்த, நம்பொத்தெடகாவலகே சித்தடகாவைய வுரித்தாடும் கீறககாமுலகேன, டிறெசெகாறெ செனவறத்ன அடிகாற முடியான்சிலாகே அவுசதகாமி யுரித்தாடும் கொடெல்லகேன்.

II.—பிரதமபடம் 3,794.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. | காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|---|
| G 1302A | ரேூட்டு | 0 0 26 | H 1302½ | லொலுக்காமுலப்பிற்ருனிய (இடுகாடு) | 0 0 9 |
| H 1302A | ரேூட்டு | 0 1 14 | | | |
| H 1302B | லொலுக்காமுலப்பிற்ருனிய (இடுகாடு) | 0 0 21 | | | 0 2 30 |

எல்லைகளாவன : வடக்கு-டெயுனுகல்பெடிகே டொத்துவா வுரித்தாடும் கோங்காமுலப்பில்லவா, டபிள்யு. டபிள்யு. கைத்தான் பெணுன்டோ வுரித்தாடும் அதவறப்பிற்றியகும்புரு, யுடடேனியஎல ; கிழக்கு-யுடடேனியஎல ; தெற்கு-முடிக்குரிய கொடெல்லவத்த ; மேற்கு-முடிக்குரிய கொடெல்லவத்த.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 475 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[குருநாக்கல் வி. உ. 12—1919.]

---

[அறிவித்தல் இல. 7,177, குருநாக்கல்.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால, அவர்கள் 1919 ம் ஞூ (எப்பிறில்) சித்திரைமீ 4 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டேனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

குறிப்பு :—இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிக்குள்ள வழியுரித்தாமென்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் தெவமெடி காற்பத்தைச்சேர்ந்த பாலதொறக் கோறளேயில் மொறகாவெவ என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே 1 ஏக்கர் 2 றூட் 5 பேர்ச் விசாலமுடையதும் 1,570 ம் பிரதமபடத்தில் 32 ம் காணித்துண்டாய்க் காட்டப்படுவதும் சாமானியமாய் அம்பகாமுலகேன என்னும் பெயரினால் அறியப்பட்டு அல்லது அழைக்கப்பட்டு வருவதுமான காணித்துண்டு. இதற்கெல்லைகளாவன : வடக்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதாகத் தீர்க்கப்பட்ட அம்பகாமுல்லவத்த (ரேூட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) ; கிழக்கும் தெற்கும்-கிராமத்தாருக்குரிய வெவகாவ கேன்யாய ; மேற்கு-குடவிற்றிகலே கிராம எல்லை.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 476 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[குருநாக்கல் வி. உ. 13—1919.]

[அறிவித்தல் இல. 7,178, குருநாக்கல்.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1919 ம் ஸூ (ஏப்பிறல்) சித்திரைமீ 4 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம் 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

கவனிப்பு.—இக்காணிக்குள்ள வழியுரித்து அக்காணிக்குள்ள உரித்தா மென்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாகல் டிஸ்திறிக் கிரியாலகாற பத்தைச்சேர்ந்த மகாகலபொட எகொட கோறளையில் பறுபே என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே 10 பேர்ச்சு விசாலமுடையதும், 2,010 ம் பிரதமபடத்தில் K 1016B ம் காணித்துண்டாய்க் காட்டப்படுவதும் சாமானியமாய் பாதை என்னும் பெயரினால் அறியப்பட்டு அல்லது அழைக்கப்பட்டு வருவதுமான காணித்துண்டு. இதற்கெல்லைகளாவன: வடக்கு-கிராமத்தாருக்குரிய மீகாமுலகேன; கிழக்கு-தமுனுகொல்லேஎல (மொறகொல்லக் கிராம எல்லை); தெற்கு-கிராமத்தாருக்குரிய மீகாமுலகேன; மேற்கு-கிராமத்தாருக்குரிய மீகாமுலகேன, பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதாகத் தீர்க்கப்பட்ட பாதை.

* இங்கிலீசின் மூன்றும் பாகம் 476 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[குருநாக்கல் வி. உ. 14—1919.]

---

[அறிவித்தல் இல. 7,179, களுத்துறை.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னாச் சொல்லப்படும் காணியிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1919 ம் ஸூ (ஏப்பிரல்) சித்திரைமீ 4 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே களுத்துறை கச்சேரியில் டிஸ்திறிக்கின் உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவில் அல்லது எழுத்து மூலமாகத் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட காணி உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு சொல்லப்பட்ட சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணி முடிக்குரியதென அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

ஸி. வீ. பிறேயின்,
களுத்துறை உதவி அரசாட்சி ஏசென்று.

குறித்த காணியின் விவரம்.

மேல் மாகாணம் களுத்துறை டிஸ்திறிக், றைகம்கோறளையில், உடுகாபத்துவிலுள்ள வகவத்த என்னுங் கிராமத்தில் இத்துடனிணைக்கப்படும் படப்பிரதியில் விவரித்தபடியே* கீழ்க்குறிக்குங் காணித்துண்டு.

பிரதமபடம் 16,707.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
| --- | --- | --- |
| 2 .. | பான்சலவத்த .. .. .. .. | 1 0 35 |

எல்லைகளாவன: வடக்கு-பான்சலவத்த (16,707 ம் பி. படத்தின் 1 ம் நம்பர் காணித்துண்டு), 46,762 ம் உரிமைப் படத்தில் உரித்தாடும் காணி; கிழக்கு-46,762 ம் உரிமைப்படத்தில் உரித்தாடும் காணி; தெற்கு-காலுகங்கையிலிருந்து கிராமங்களுக்குப் போகும் றேட்டு; மேற்கு-காலுகங்கையிலிருந்து, கிராமங்களுக்குப் போகும் றேட்டிலிருந்து பேத் தோட்டத்திலிருந்து வரும் றேட்டுக்குப்போகும் வழிப்பாதை.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 477 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

---

[அறிவித்தல் இல. 7,180, இரத்தினபுரி.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணியிலேயும் அதையடுத்த பாதையிலும் ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1919 ம் ஸூ (ஏப்பிரல்) சித்திரை மாதம் 4 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே, ரத்தினபுரி கச்சேரியில் சபரகமுவை மாகாணத்து அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவிற் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி சொல்லப்பட்ட காணியை அல்லது காணித்துண்டுகளை அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு சொல்லப்பட்ட சட்டத்தினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணிகளை முடிக்குரிய என அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

பி. கொன்ஸ்றன்றைன்,
அரசாட்சி ஏசென்று.

சொல்லப்பட்ட காணியின் விவரம்.

கீழ்க்காட்டும் படத்தில் காட்டப்படும் காணிதுண்டுகள் சபறகாமுவை மாகாணத்து, இரட்டினப்பிறை டிஸ்திறிக்கு குருள்கோறளை உடபற்றிலுள்ள வெத்தாகள என்னும் குறிச்சியிலாயிருக்கும்.

I.—பிரதமபடம் நிம்பர் 2,766.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
| --- | --- | --- |
| 1 .. | மூகலானஅதுற .. .. .. .. | 1 3 22·18 |

எல்லைகள்: வடக்கு-முடிக்குரிய புஸ்வெல்கெடியேஹேன; கிழக்கு-முடிக்குரிய புஸ்வெல்கெடியேஹேன; தெற்கு-பீ. எச். டப்ளியூ. தென்கூனுக்குடைய தென்னேபிடஹேனயும், (பிறதமபடம் 2,766/2) முடிக்குரிய மூகலானஅதுற; மேற்கு-முடிக்குரிய புஸ்வெல்கெடியேஹேன.

II.—பிரதமபடம் நிம்பர் 2,766.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
| --- | --- | --- |
| 2 .. | மூகலான்அதுற .. .. .. .. | 0 0 22·65 |

எல்லைகள்-வடக்காலும் கிழக்காலும் முடிக்குரிய மூகலானஅதுற (பிறதமபடம் 2,766/1); தெற்காலும் மேற்காலும்-பீ. எச். டபின்யூ, தென்னகோன்குடைய தென்னபிடஹேன அல்லது புளுங்கஹஹேன.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 577—478 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.

[அறிவித்தல் இல. 7,181, கொழும்பு.]

### 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணி அல்லது காணிகளில் உடைமையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள், 1919 ம் ஆண்டு (ஏப்பிறல்) சித்திரைமாதம் 4 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கொழும்புக் கந்தோரில் மேல்மாகாணம் கொழும்பு நீர்கொழும்பு உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவில் முகாமுகமாயேனும் அல்லது எழுத்து மூலமாயேனுந் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது ஒன்றிலேனுக்கும் அல்லது அதிலே யாதும் உடைமைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு மேற்சொல்லப்பட்ட சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப் படாததாகிய குறித்த காணிகள் அல்லது அப்படிப்பட்டவைகள் முடிக்குரிய என அவருடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவாரகள் என்பதை அறிந்துகொள்க.

ஜீ. எஸ். உற்மென்,
கொழும்பு நீர்கொழும்பு உதவி அரசாட்சி ஏசென்று.

சொல்லப்பட்ட நிலங்களின் விவரம்.

மேல் மாகாணம் கொழும்பு டிஸ்திறிக் சியாணிக் கோறளை கிழக்கு கங்கபொடபற்று வெல்கம கிராமத்திலிருக்கும் அணைத்திருக்கும் படப்பிரதியில்* காட்டியபடி கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

துண்டளவின் 1 ம் இலக்க எக்ஸ்றிருக். பிரதமபட இலக்கம் 26.

| துண்டு. | நிலத்தின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 1 | கொன்னககலந்த | 0 3 5 |
| 2 | ஷை | 0 1 38 |
| | | 1 1 3 |

எல்லைகளாவன : வடக்கு-ஏ. ஏபிறகாமாவும் மற்றவர்களாலும் உருத்தாடப்பட்ட கித்துல்கேனு ; கிழக்கு-டபிள்யு. சி: டியோனிசாலும் மற்றவர்களாலும் உருத்தாடப்பட்ட கொன்னககவத்த ; தெற்கும் மேற்கும்-ஏ. ஏபிறகாமாலும் மற்றவர்களாலும் உருத்தாடப்பட்ட கித்துல்கேனு.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 479 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

---

### காணி அளவையைப்பற்றிய அறிவித்தல்.

முடிக்குரிய பூமியை விலைக்குவாங்க அல்லது குத்தகைக் கெடுப்பதற்கான கேள்வி அளவைகள் இனிமேல் கீழ்மாகாணத்தின் பகுதிகளில் முறைமுறையாக நடத்தப்படுமென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. இம்மாகாணம் பிரிக்கப்பட்டிருப்பதாவது :—

1 ம் பகுதி.—இது மட்டக்களப்பு டிஸ்திறிக்கிலிருக்கும் கோறளை, ஏறாவூர், உறுகாமம், விந்தனை, மண்முனை (வடக்கும் தெற்கும்) எருவில் போரதீவுப்பற்றுகளையும் அடக்கும்.

2 ம் பகுதி.—இத்திரிகோணமலை டிஸ்திறிக் முழுவதையும் அடக்கும்.

3 ம் பகுதி.—இது மட்டக்களப்பு டிஸ்திறிக்கிலிருக்கும் நாடுகாடு, சம்மாந்துறை கரைவாகு, நிந்தவூர், அக்கரை, பாணமைப்பற்றுகளை அடக்கும்.

3. 2 ம் பகுதி 1919 ம் ஆண்டு இங்கிலீசுக்கு வைகாசிமாதம் 1 ந் திகதியிலன்று அளவைக்காக மூடப்படும். இந்தப் பகுதிக்குட்பட்ட பூமிகளின் கேள்விப்பத்திரங்கள் ஒன்றும் அத்தேதியின்பின் அளவைத்தலைவருக்கு அனுப்பப்படமாட்டாது. ஆகிலும் இவ்வேற்பாடு இப்பகுதிக்குள்ளிருக்கும் பூமிகளை நோக்கி அவைகளின் விற்பனவுக்கு அல்லது குத்தகையில் கொடுப்பதற்கு ஏதாகுதல் தடையிருக்கிறதோ வென்பதை நிச்சயித் தறிதற்பொருட்டு கேள்விப்பத்திரம் எனக்கனுப்பிப் பதிவுசெய்விப்பதைத் தடைசெய்யமாட்டாது.

4. கேள்விப் பூமிஅளவை நடத்தப்படாமல் அதன்பின் கட்டளையிடப்படும் பகுதி 3 ம் இலக்கப் பகுதியும் அதன்பின் 1 ம் இலக்கப்பகுதியுமாம். இவ்விரண்டு பகுதிகளிலும் முடிக்குரிய பூமியை விலைக்குவாங்க அல்லது குத்தகைக் கெடுப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் கூடியளவு சுறுக்கில் எனக்கு அனுப்பப்படல் வேண்டும்.

5. 3 ம் இலக்கப் பகுதியை அளவைக்காக மூடப்படும் திகதி சுறுக்கில் பிரசித்தப்படுத்தப்படும், அது 2 ம் இலக்கப் பகுதியிலுள்ள அளவைகள் எல்லாம் முற்றுப்பெற்ற திகதியைக் குறிக்கும்.

எஸ். ஆர். முத்துகுமாரு,
கீழ்மாகாண அரசாட்சி ஏசென்றுத் துரைக்காக.

1919 ம் ஆண்டு பங்குனிமீ 27 ந் தேதி.

---

### கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

புத்தளம் தென் உப்புமாவிலுள்ள 30 ம், 31 ம் உப்புக் குதங்களைப் பழுதுபார்க்கும் வேலையொப்பந்தத்திற் கொடுக்கப்படும்.

2. இவ்வொப்பந்தத்தைக் கேட்க விரும்புபவர் தமது கேள்விப்பத்திரத்தை யோர் முத்திரித்த வுறையிலிட்டு அதனிடது மூலையில் "புத்தளந் தென் உப்புமாவிலுள்ள 30 ம், 31 ம் உப்புக்குதங்களைப் பழுதுபார்க்கும் ஒப்பந்தக்கேள்வி" யென்டெழுதி புத்தள முதலி யேசண்டவர்கட்கு 1919 ம் ஆண்டு சித்திரைமாதம் 15 ந் தேதிபிற்பகல் ஒரு மணிக்கு முந்திக் கிடைக்கத்தக்கதாக வனுப்பவேண்டும்.

3. மேற்படி கேள்விப்பத்திரத்தை யனுப்பமுந்தி கேள்விக்காறன் யெந்தக் கச்சேரியிலாவது ஒரு கச்சேரியில் முற்பணமாகப் பத்து ரூபாய் கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றிச் சீட்டைக் கேள்விப் பத்திரத்தோ டிணைக்கவேண்டும்.

4. கேள்வி யேற்றுக்கொள்ளப்படுங் காலத்தில் தான் வேலையைக் கிரமமாக முடித்துப்போடுவதாய் தனது கேள்வியேற்றுக்கொள்ளப்பட்டபின் ஞாயமான காலத்துள் உதவியேசண்டவர்களுடன் கேள்விக்காறன் ஓர் உடன்படிக்கை பண்ணிக்கொள்ளவேண்டும். அப்படி யுடன்படிக்கை பண்ணிக்கொள்ளத் தவறினால் கட்டிய முற்பணம் பறிமுதலாக்கப்படும்.

5. கேள்விக்காறன் தனக்குக் காயிதங்கள் கிடைக்கத்தக்கதாகப் புத்தளத்தில் ஓர் விலாசத்தைக்குறிக்கவேண்டும்.

6. உடன்படிக்கை பண்ணிகொண்டதின்பின் நாலு கிழமைக்குள் வேலையைக் கிரமமாக முடித்துப்போடவேண்டும்.

7. இன்னும் வேண்டிய விபரங்களைப் புத்தள மூப்புத்துரையவர்களிடமிருந்து பேற்றுக்கொள்ளலாம்.

## செய்யவேண்டிய வேலையின் விபரம்.

சொல்லிய குதங்களிற் தற்போது உழுத்தும் பழுதாயும் போயிருக்கும் மரந்தடி ஓடுகு முதலியவற்றை யெடுத்துப் போட்டு புதிய மரந்தடி ஓடுகு முதலியவற்றைப் போட வேண்டும்.

குதங்களெல்லாவற்றையும் புதுக் ஓடுகினால் வேய்ந்து கூரைக்கு மேற்பாரமாகப் பூட்டுகளை வைக்கவேண்டும்.

குதங்களின் செத்தைகளைப் புதுக் ஓடுகினால் அடைக்க வேண்டும். செத்தைகளில் ஒளிவாயிருக்கும் மிடங்களை நேராக்கிப் பழுதுபார்க்க வேண்டும்.

குதங்களின் உள்நிலத்திற்கு வேண்டியவிடங்களில் மண் போட் டுயர்த்தி இறுக்கி மட்டமாக்க வேண்டும்.

குதங்களின் உட்புறத்திற்கு ; புதுக் ஓடுகினால் வரிச்சிப் பிடிக்கவேண்டும்.

எஸ். எம். பி. வேந்தர்கோன்,
உதவி யேசண்டருக்காக.

புத்தளம் கச்சேரி,
1919 ம் ஸ்ரீ பங்குனிமீ 28 ந் தேதி.

---

மேல்கரையிலுள்ள உப்புக் காவற்காறருடையவும் முதற் பேர் முதலியவருடையவும் வீடுகளைப் பழுதுபார்க்கும் வேலை ஒப்பந்தத்திற் கொடுக்கப்படும்.

2\. கேள்விக்காறன் தனது கேள்விப்பத்திரத்தை முத்திரித்த உறையிலிட்டு அதன் இடது மூலையில் "மேல் கரையிலுள்ள உப்புக்காவற்காறருடையவும் முதற்பேர் முதலானவருடையவும் வீடுகளைப் பழுதுபார்க்கும் ஒப்பந்தக் கேள்வி" யென்றெழுதி, புத்தளம் உதவி யேசண்டவர்களுக்கு சித்திரைமாதம் 15 ந் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு முந்திக் கிடைக்கத்தக்கதாக அனுப்பவேண்டும்.

3\. கேள்விப்பத்திரத்தை யனுப்பமுந்தி கேள்விக்காறன் எந்தக் கச்சேரியிலாவது ஒரு கச்சேரியில் முற்பணமாகப் பத்துரூபாய் கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றிச்சீட்டைக் கேள்விப்பத்திரத்தோ டிணைக்கவேண்டும்.

4\. இவ் முற்பணம் கேள்விக்காறன் தனது கேள்வி யேற்றுக்கொள்ளப்பட்டபின் ஞாயமான காலத்துள் தான் வேலையைக் கிரமமாக முடிப்பதாயோர் உடன்படிக்கைபண்ணிக்கொள்ளாவிட்டால் கட்டிய முற்பணம் பறிமுதலாக்கப்படும்.

5\. கேள்விக்காறன் தனக்குக் காயிதங்கள் கிடைக்கத்தக்கதாக புத்தளத்தில் ஓர் விலாசத்தைக் குறிக்க வேண்டும்.

6\. உடன்படிக்கை பண்ணிக்கொண்டபின் 4 கிழமைக்குள் வேலையை முடித்துப்போடவேண்டும்.

7\. இன்னும் வேண்டிய விபரங்களைப் புத்தளம் உப்புத்துரை யவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவும்.

### முதற்பேருடைய வங்களாவிற் செய்யவேண்டிய வேலைகள்.

வங்களாவுடையவுங் குசினியுடையவுங் கூரையைப் பழுதுபார்க்கவேண்டும். பழுதாய்ப்போன மரங்களையும் ஓடுகளையும் எடுத்துப்போட்டுப் புதிய மரங்களும் ஓடுகளும் போடவெண்டும்.

சிவர்களைப் பழுதுபார்த்து வெள்ளையடிக்கவேண்டும்.

உள்நிலத்தை வேண்டிய விடங்களிற் பழுதுபார்த்து வேண்டிய விடங்களில் சீமேந்திட்டுப் பூசவேண்டும்.

குசினியில் ஓர் புது யன்னலைப் பூட்டவேண்டும்.

சாப்பிடுகிற வறையையும் மலசலங் கழிக்கு மிடத்தையும் பழுதுபார்த்து இரும்பி வேய்ந்து கூரைக்கு மேற்பாரமாகப் பூட்டுகளை வைக்கவேண்டும்.

வேலியைப் புதுக் கிடுகிங் கதியால் கழும்போட்டுப் பழுது பார்க்கவேண்டும்.

கதவுகள், யன்னல்கள் கப்புகள், தீராந்திகள் யாவற்றிற்கும் மைபூசவேண்டும்.

குசினிக்கதவிற் கோர் பூட்டுந் திறப்பும் போடவேண்டும்.

கங்காணியுடையவுங் காவற்காறருடையவும் வீடுகளிற் செய்யவேண்டிய வேலைகள் :—

தற்போதவ்வீடுகளில் உழுத்தும் பழுதாயும் போயிருக்கும் மரந்தடி ஓடுகு முதலியவற்றை யெடுத்துப்போட்டுப் புதுக் ஓடுகு மரநதடி முதலியவற்றைப் போடவேண்டும்.

வீடுகள் வெளிவீடுகள் எல்லாவற்றையும் புதுக் ஓடுகினால் வேய்ந்து கூரைக்கு மேற்பாரமாகப் பூட்டுகளை வைக்க வேண்டும்.

வீடுகளின் உள் நிலத்திற்கு வேண்டிய விடங்களில் மண் போட்டுயர்த்தி யிறுக்கி மட்டமாக்கிச் சாணத்தால் மெழுக வேண்டும்.

வேலிகள் கட்டை வேலிகள் எல்லாவற்றையும் புதுக் கிடுகுகளுங் கதியால்களும் போட்டுப் பழுதுபார்க்க வேண்டும்.

கங்காணியுடைய வீட்டின் சிவர்களிலுள்ள கறையான் பாழிகளை யெடுத்துப்போட்டுச் சிவர்களைப் பழுதுபார்க்க வேண்டும். அடுக்களைச் சிவர்களிலு மொன்றைப் பழுது பார்க்க வேண்டும். பூட்டுகளுந் திறப்புகளு மமைத்து இரண்டு புதுக் கதவுகளைப் போடவேண்டும். யன்னலைப் பழுதுபார்க்கவேண்டும். கதவுகள் யன்னல்கள் யாவற்றையும் பழுதுபார்க்கவேண்டும். 12 அடி நீளம் 8 அடி அகலமுள்ளதா யோர் மலசலங்கழிக்கு மிடத்தைக் கட்டிப் புது ஓடுகினால் வேயவேண்டும்.

காவற்காறன் ஐமிலுடைய வீட்டு நிலத்தை யரையடிக் குயர்த்தவேண்டும்.

இபுறுகீமுடைய வீட்டைப் பிடிங்கி அதிலுள்ள நல்ல மரந்தடிகளைக் கொண்டும் இன்னும் புதிய மரந்தடிகளைக் கொண்டும் ஓர் புதிய கொட்டிலைக் கட்டவேண்டும்.

பக்கீர், இபுறுகீம், மனுவேல் ஆகிய விவர்களுடைய வீட்டுக் கதவுகளுக்கு பூட்டுந் திறப்பும் போடவேண்டும்.

எஸ் எம். பி. வேந்தர்கோன்,
உதவி யேசண்டருக்காக.

புத்தளம் கச்சேரி,
1919 ம் ஸ்ரீ பங்குனிமீ 28 ந் தேதி.

---

## சுப்பிரீங்கோட்டு அறிவித்தல்.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங்கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: காலி நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங்கோட்டாரால் காலி டிஸ்திறிக்டைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1919 ம் ஆண்டு எப்றில் மாதம் 25 ந் திகதியாகிய வெள்ளிக்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்க ளெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,
ஜே. ஏ. லோறென்ஸ்,
டெபியூட்டி பிஸ்கால்.

காலி பிஸ்கால் கந்தோர்,
1919 ம் ஸ்ரீ மாற்ச்சிமீ 31 ந் வ.

---

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.